2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) தந்தை பெரியாருடைய இதயம் குறித்து.

* திரு. துரை முருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் கவர்னர் உரைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்தில் மறைந்த பெரியாருடைய இதயம் கிடைத்துவிட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த இதயம், இங்கே இந்தக் கட்டிடத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய ஆதாரமாக சில காகிதங்களைத் தூக்கிக் காட்டினார்கள். ஆனால், அந்தக் காகிதத்திலே என்ன எழுதப் பட்டிருக்கிறது என்று நாங்கள் பார்க்கவில்லை. இதயத்தையும் நாங்கள் பார்க்கவில்லை. ஆகவே, அந்த இதயத்தையும்... (மணியடிக்கப்பெற்றது) அதிலே ஒரு சர்ச்சை எழுந்திருக்கிறது— முதலிலே இல்லையென்று சொல்லி பிறகு வந்திருக்கிறது. ஆகவே நாங்கள் கண்டறியும் இதயத்தைப் பார்த்து, இது ஐயா இதயம்தான் என்று, இதயத்தை முதலிலே மன்ற உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் சபாநாயகர் அவர்கள் அறையில் வைக்க வேண்டும். அவருடைய இதயம்தான் என்ற அத்தாட்சிக் கடிதங்களையும் நாங்கள் பார்க்கவேண்டும். அதிலே ஏதாவது சந்தேகம் ஏற்படுமானால், இரசாயன அதிகாரி ஒரு ஐட்ஜ் வைத்து பரிசீலிக்க வேண்டும். ஆகவே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சுருக்கமாக முடியுங்கள். நீங்கள் கேட்கிற ஒழுங்குப் பிரச்னைக்குப் பதில் சொல்ல முதலமைச்சர் இல்லை. (குறுக்கீடு) உங்களுடைய கருத்து புரிந்துவிட்டது. அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தால் சொல்லட்டும், நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய இதயம், அது போன்ற மற்ற உறுப்புகள் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையில் பாதுகாப்பாக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. நாம் தொடர்பு கொண்டு எழுதிய கடிதத்தின் விளைவாக அவர்களும் பதில் கடிதம் எழுதி அந்தப் பொருட்களை நம்முடைய மருத்துவத் துறையினரிடம் ஒப்படைத்துள்ளார்கள். நேற்று மதியம் நான் முதல்வர் அறைக்குச் சென்றபொழுது அந்த இதயம் அங்கே கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது. அதை நானும் பார்த்தேன். அதோடு மட்டுமல்லாமல் சி.எம்.சி. மருத்துவ மனையிலேயிருந்து அதிகாரபூர்வமாக எழுதிய கடிதத்தையும் நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பெரியார் இதயம் எனக்குப் புரியாது என்று நிச்சயமாகக் கருதமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 17

மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களானால் பெரியாருடைய இதயத்தைப் பேரவைத் தலைவர் அறையில் வைப்பதற்கும் உறுப்பினர்கள் பார்ப்பதற்கும் அரசு நிச்சயமாக வழிசெய்யும்.

திரு. துரை முருகன் : ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்ட..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன், தயவு செய்து உட்காருங்கள். ஒரு விளக்கம் கேட்டீர்கள். அதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. மேலும் மேலும் விளக்கம் கேட்டுக்கொண்டு போவது சரியல்ல.

திரு. துரை முருகன் : அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காகத்தான் கேட்கிறேன். முதலமைச்சர் சொன்னதை நான் சந்தேகிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை என்று ஆரம்பித்து, விவாதமாக இதை வளர்த்துக்கொண்டு போவது சரியல்ல.

* திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உறுப்பினர் மேலும் மேலும் இந்தப் பிரச்னை குறித்து கேட்டுக்கொண்டு இருப்பதற்குக் காரணம் முடிவான கருத்து முழுவதுமாக சொல்லப் படவில்லை. அவர் மருத்துவ மனையில் இருந்து வந்த கடிதம் வைக்கப்படுமா என்று கேட்டார். விருப்பம் இருந்தால் அதையும் வையுங்கள். வேறு பல உறுப்புகள் உள்ளன என்று சொன்னார்கள். இது என்னென்ன உறுப்புகள் என்பது அவைக்குத் தெரிந்தால் நல்லது. பெரியாரைப் பற்றி தெரிந்து கொள்ள இருக்கிற ஆர்வத்தின் காரணமாக கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் பெரியாரின் இதயம், மற்றும் சில உறுப்புகள் வந்திருப்பதாகச் சொல்லி இருக்கிறது. பெரியாருடைய மூளைதான்—உலகத்திலேயே யாருக்கும் இல்லாத ஆற்றல் கொண்டது என்று பாராட்டப்பெற்றது—அந்த மூளை கிடைத்து இருந்தால் அரசுக்கும், எதிர்கட்சிகளுக்கும் நல்லது. அதுவும் கொண்டு வரப்பட்டு இருக்கிறதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அங்கே என்னென்ன எடுத்து வைக்க பெற்றிருந்தனவோ, அவற்றைத் தந்து இருக்கிறார்கள் அவைகள் கொண்டு வரப்பெற்று இருக்கின்றன. இங்கே இருக்கிற உறுப்பினர்கள் பார்க்க வேண்டுமானால், இங்கே சான்ன பால், அவைத் தலைவர் அறையில் வைக்கப்படும். வந்து பார்க்கலாம்.